In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi

Case No : Spl.SC.44/2025

Deposition of PW.1

****

Name திரு.சிவசக்திவேல்

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 7th day of September 2026.

**A1 to A3 present.**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது சிப்காட் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.06.2019 ல் குரும்பூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்த போது, நான், சிறப்பு உதவியாளர் திரு.நெல்லையப்பன், தலைைக் காவலர் 2263 ஸ்ரீதரன் ஆகியோர் சகிதம் மணல் திருட்டு சம்பந்தமாக ரோந்து சென்ற போது, சொக்கபழங்கரை அருகே தாமிரபரணி ஆற்றின் வடக்கே ஆற்றில் TN20 BM 8311 என்ற டிப்பர் வேனில் மணல் அள்ளிக் கொண்டிருந்தவர்களை பின்னால் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த கொண்ட மேலாத்தூரைச் சேர்ந்த சௌந்தரபாண்டியன் மகன் அசோக் சுப்பையா, சொக்கபழங்கரையைச் சேர்ந்த பூல்துரை, செல்வம் ஆகியோர்கள் போலீஸ் பார்ட்டியாகிய எங்களைக் கண்டதும் ஓடி முட்புதருக்குள் ஒளிந்து கொண்டனர். பின்பு, டிப்பர் லாரியில் இருந்த மண், வண்டி, இரண்டு சட்டி ஆகியவற்றை அத்தாட்சி பிறப்பித்து அத்தாட்சியில் கையெழுத்திட பொதுமக்கள் யாரும் 3.30 மணிக்கு வராததால் போலீஸ் பார்ட்டியாகிய நாங்களே அத்தாட்சியில் கையொப்பம் செய்தோம். அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது, என்னுடன் தலைமைக்காவலராக இருந்த ஸ்ரீதர் என்பவர் 2 வதாக கையொப்பம் செய்தார். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆகும்.பின்பு, வழக்கு சொத்துக்களுடன் அதிகாலை 4.30 மணிக்கு நிலையம் வந்து சிறப்பு உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். நான்

S SUBA DEVI Digitally signed by S SUBA DEVI Date: 2026.09.07 16:47:30 +0530

உடன் இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்குவிசாரணை :</u> (அனைத்து எதிரிகள் தரப்பில்)**

சம்பவ இடத்திற்கு யார் யார் எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் இருசக்கர வாகனத்தில் அவரவருக்குரிய வாகனத்தில் சென்றோம். சம்பவ இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார்5 கிமீ இருக்கும். லாரி யாருக்கு சொந்தமானது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடத்தில் எதிரிகளை யாரையும் நாங்கள் கைது செய்யவில்லை என்றால் ஆமாம். எதிரிகளை நான் இதற்கு முன்பு பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. எதிரிகள் பற்றிய விபரங்களை நான் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் ஊரில் உள்ளவர்களை விசாரித்து தெரிந்து கொண்டேன். ஊரில் யாரிடம் விசாரித்து தெரிந்து கொண்டேன் என்பது குறித்து நான் ஆய்வாளரிடம் சொன்னேனா என்றால் இல்லை. நான் ஊரில் விசாரித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 ஐ யார் எழுதினார் என்றால் உதவி ஆய்வாளர் எழுதினார். எங்கு வைத்து அ.சா.ஆ.1 எழுதப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் வைத்து எழுதப்பட்டது. வழக்கில் தாக்கல் செய்த அத்தாட்சி கம்ப்யூட்டரில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். லாப்டாப் எங்களுக்கு உள்ளது. அத்தாட்சி 03.07.2019 அன்று தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதாக முத்திரை உள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட வாகனத்தை சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு எப்போது யாரால் எடுத்து செல்லப்பட்டது என்றால் ஊரில் தெரிந்த நபர்களை வைத்து எடுத்து சென்றோம், அவர்கள் பெயர் ஞாபகமில்லை. எதிரியின் ஷெட்டில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தை எடுத்து வந்து பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. உள்ளூர் நபர்களை வைத்து வாகனம் எடுத்து வந்ததாக தவறு என்றால் சரியல்ல. 1ம் எதிரி ஆத்தூரில் தியேட்டர் நடத்திவருகிறார், 2 மற்றும் 3 எதிரிகள் அவரிடம் வேலை செய்து வருகிறார்கள், உயர்அதிகாரிக்கும் அவருக்கும் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன நாளில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் ரோந்து சென்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அத்தாட்சி மற்றும் அத்தாட்சியின் மூலமாக கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.09.07 16:47:39 +0530

எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>**

இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

S SUBA DEVI
Digitally signed by S SUBA DEVI
Date: 2026.09.07 16:47:44 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**

In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi
Case No : Spl.SC.44/2025
Deposition of PW.2
****

Name திரு.ஸ்ரீதரன்

Father's Name
Village
Taluk
Calling
Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 7th day of September 2026.

**A1 to A3 present.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் செய்துங்கநல்லூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.06.2019 ந்தேதி குரும்பூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றிய போது, அதிகாலை 3.30 மணிக்கு மேற்படி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் நெல்லையப்பன் அவர்களுக்கு உதவியாக தலைமைக்காவலர் 2126 சிவசக்திவேல் ஆகியோர் சகிதம் மணல் திருட்டு சம்பந்தமாக ரோந்து செய்த போது சொக்கபழக்கரை ஊருக்கு வடக்கே தாமிரபரணி ஆற்றுக்குள் TN20 BM 8311 என்ற டிப்பர் வேனின் பின்புறம் பின்னால் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த மேலஆத்தூர் அசோக்சுப்பையா, சொக்கபழக்கரை பூல்துரை என்ற சந்திரசேகர், தெற்குநல்லூர் செல்வம் ஆகியோர் மணல் அள்ளி டிப்பர் வேனில் போட்டுக் கொண்டிருந்தார்கள். போலீஸ் பார்ட்டியாகிய எங்களைக் கண்டதும் இருட்டுக்குள் முட்புதருக்குள் ஓடி தலைமறைவாகி விட்டனர். அவர்களை பிடிக்க முற்பட்டும் இயலவில்லை. மேற்படி வேனின் பின்புறம் திறந்து பார்த்த போது சுமார் 10 சட்டி ஆற்று மணல் , இரண்டு மண் சட்டிகள் இருந்தது. அரசின் அனுமதியில்லாமலும், சட்ட விரோதமாக லாப நோக்கத்திற்காக திருட்டுத் தனமாக அள்ளிய ஆற்று மணலை இரும்பு சட்டி, வண்டி சகிதம் நிலையம் கொண்டு செல்ல கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து மேற்படி அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும்

S SUBA DEVI
Digitally signed by S SUBA DEVI
Date: 2026.09.07 16:47:57 +0530

கையெழுத்திட முன் வராததால் போலீஸ் பார்ட்டியாகிய நானும், சிவசக்திவேல் என்பவரும் கையொப்பம் செய்தோம். பின்பு, சொத்து மற்றும் அத்தாட்சி சகிதம் நிலையம் 4.30 மணிக்கு கொண்டு சென்று நிலையக் குற்ற எண்.60/2019 u/s.379 இதச வாக வழக்கு பதிவு செய்ய சிறப்பு உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது தொடர்பாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை :</u> **(அனைத்து எதிரிகள் தரப்பில்)**

சம்பவ இடத்திற்கு யார் யார் எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர் ஒரு வாகனத்திலும், நாங்கள் ஒரு வாகனத்திலும் சென்றோம். சம்பவ இடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 4 கிமீ இருக்கும். லாரி யாருக்கு சொந்தமானது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடத்தில் எதிரிகளை யாரையும் நாங்கள் கைது செய்யவில்லை என்றால் ஆமாம். எதிரிகளை நான் இதற்கு முன்பு பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. எதிரிகள் பற்றிய விபரங்களை நான் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் ஊரில் உள்ளவர்களை விசாரித்து தெரிந்து கொண்டேன். ஊரில் யாரிடம் விசாரித்தேன் என்றால் தெரிந்த நபர்களிடம் விசாரித்தேன். சம்பவ இடத்திற்கு நான் சென்ற போது எதிரிக்கும் எனக்கும் எவ்வளவு தூரம் என்றால் பத்தடி தூரம் இருக்கும். அ.சா.ஆ.1 ஐ யார் எழுதினார் என்றால் உதவி ஆய்வாளர் எழுதினார். எங்கு வைத்து அ.சா.ஆ.1 எழுதப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் வைத்து எழுதப்பட்டது. வழக்கில் தாக்கல் செய்த அத்தாட்சி கம்ப்யூட்டரில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். அத்தாட்சி 03.07.2019 அன்று தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதாக முத்திரை உள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட வாகனத்தை சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு எப்போது யாரால் எடுத்து செல்லப்பட்டது என்றால் ஊரில் தெரியாத நபர்களை வைத்து எடுத்து சென்றோம். அவர்கள் பெயர் என்ன என்றால் ஞாபகமில்லை. எதிரியின் ஷெட்டில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தை எடுத்து வந்து பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல உள்ளூர் நபர்களை வைத்து வாகனம் எடுத்து வந்ததாக தவறு என்றால் சரியல்ல. 1ம் எதிரி ஆத்தூரில் தியேட்டர் நடத்திவருகிறார், 2 மற்றும் 3 எதிரிகள் அவரிடம் வேலை செய்து வருகிறார்கள், உயர்அதிகாரிக்கும் அவருக்கும் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.09.07 16:48:03 +0530

நான் சொன்ன நேரத்தில், சொன்ன நாளில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் ரோந்து சென்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அத்தாட்சி மற்றும் அத்தாட்சியின் மூலமாக கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :**

இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.09.07 16:48:08 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**

In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi

Case No : Spl.SC.44/2025

Deposition of PW.3

****

Name திரு.இசக்கிமுத்து

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 7th day of September 2026.

**A1 to A3 present.**

**முதல் விசாரணை :**

நான் சொக்கபழங்கரை ஊரில் விவசாய வேலை பார்த்து வருகிறேன். குரும்பூர் போலீசார் எங்கள் ஊரில் உள்ள ஆற்றுக்கரையில் நின்றிருந்த போது, போலீசார் அங்கு வந்து படம் வரைந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. அந்த முதல் கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும். என்னுடன் அருண்குமார் என்பவர் கையொப்பம் செய்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அ.சா.3 அரசு தரப்புபடி பார்வை மகஜர் தயாரிக்கப்பட்ட போது சாட்சியாக இருந்த போதிலும் அவர் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் சொல்வதால் அந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்குரைஞரால் அனுமதி கோரி அவ்வாறே அனுமதி வழங்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்)

**குறுக்குவிசாரணை : (அரசு தரப்பில்)**

15.06.2019 அன்று காலை 6.30 மணிக்கு குரும்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடமான சொக்கபழங்கரை ஊருக்கு வடக்கே உள்ள தாமிரபரணி ஆற்றின் உள்ள சம்பவ இடத்தையும், அதன் சுற்றப்புறத்தையும்

S SUBA DEVI Digitally signed by S SUBA DEVI Date: 2026.09.07 16:48:15 +0530

பார்வையிட்டு அருண்குமார் மற்றும் என் முன்பாக பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நானும், அருண்குமாரும் கையொப்பம் இட்டதாக போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை : (எதிரிகள் தரப்பில்)**

குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை :**

இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.09.07 16:48:20 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**

In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi
Case No : Spl.SC.44/2025
Deposition of PW.4
****

Name திரு.அருண்குமார்

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 7th day of September 2026.

**A1 to A3 present.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சென்னையில் வசித்து வேலை பார்த்து வருகிறேன். எனது சொந்த ஊர் சொக்கபழுங்கரை. என் வீட்டருகே 200 மீட்டர் துாரத்தில் உள்ள ஆற்றில் குளிக்க சென்ற போது, படம் வரைந்து இடத்தை பார்வையிட்டு அதில் அத்தாட்சியாக என்னையும், என் நண்பன் இசக்கிமுத்துவையும் கையெழுத்து போடச் சொன்னார்கள். அதில் கையெழுத்து போட்டோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை : (அனைத்து எதிரிகள் தரப்பில்)**

பார்வைமகஜரில் என்ன எழுதியிருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் மணல் திருட்டு போனதாக சொன்னார்கள். நான் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டு விட்டு போலீசாரின் வேண்டுகோளுக்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :**

இல்லை.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.09.07 16:48:27 +0530

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி/எதிரிகள் தரப்பு முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.09.07 16:48:32 +0530

**முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தூத்துக்குடி.**